**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 63** **நாள்: 30.01.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வளர்க்கப்படும் மாடுகளின் எண்ணிக்கையினை அறியவும், மாடுகள் வளர்ப்பினை முறைப்படுத்தவும், அதற்கான திட்டங்களை உருவாக்கவும், மாடுகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்படவுள்ளது. மாடு வளர்க்கும் உரிமையாளர்கள் 18.03.2026க்குள் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்து உரிமம் பெற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் வளர்க்கப்படும் மாடுகளின் எண்ணிக்கையினை அறியவும், மாடுகள் வளர்ப்பினை முறைப்படுத்தவும், அதற்கான திட்டங்களை உருவாக்கவும், மாடுகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்க வேண்டியுள்ளது. அதன்படி மாடுகளின் உரிமையாளர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களின் அடிப்படையில் உரிமம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை, பெருநகர சென்னை மாநகராட்சியின் (www.chennaicorporation.gov.in) இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து மாடுகளின் உரிமையாளர்கள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலகங்களில் மாடுகளின் உரிமையாளர்கள் 18.03.2026 க்குள் சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பங்களை மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்கள், கோட்ட சுகாதார ஆய்வாளர்களுடன் இணைந்து கள ஆய்வு செய்து மாடு ஒன்றிற்கு ரூ.100/- உரிமக்கட்டணம் பெறப்பட்டு, மாடுகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்படவுள்ளது.

உரிமம் வழங்கப்படும் போது ஒவ்வொரு மாட்டிற்கும் மைக்ரோசிப் செலுத்தி இதன்மூலம் மாட்டின் உரிமையாளர்களின் பெயர், முகவரி மாடுகளின் விவரங்கள் ஆகியவை ஆவணப்படுத்தப்படவுள்ளது.

இந்த உரிமம் வழங்கும் திட்டத்திற்கு மாடுகளின் உரிமையாளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி தாங்கள் வளர்க்கும் அனைத்து மாடுகளுக்கும் 18.03.2026 க்குள் விண்ணப்பித்து உரிமம் பெற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.